
**ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව**

இலங்கைப் பாராளுமன்றம்

# Parliament of Sri Lanka



# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## ANNUAL PERFORMANCE REPORT

## 2017

වැය ශීර්ෂය<br>தலைப்பு<br>**Head** } **16**

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව, ශ්‍රී ජයවර්ධනපුර, කෝට්ටේ
இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
**Parliament of Sri Lanka, Sri Jayewardenepura, Kotte**

# இலங்கைப் பாராளுமன்றம்

## தலைப்பு இலக்கம் 16

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2017

### உள்ளடக்கம்


| இலக்கம் | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பணிகள் | 3 |
| 2. | பிரதான தொழிற்பாடுகள் | 3 |
| 3. | நிறுவனக் கட்டமைப்பு | 3 - 6 |
| 4. | பணியாட்டொகுதி விபரங்கள் | 6 |
| 5. | <u>வருடாந்த செயலாற்றுகை</u> | |
| 5.1 | நிதி நிர்வாகம் | 7 - 12 |
| 6. | சட்டவாக்க சேவைகள் திணைக்களம் | |
| 6.1 | துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் | 13 - 15 |
| 6.2 | விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள் | |
| (i) | அரசாங்க நிதி பற்றிய குழு | 15 |
| (ii) | தெரிவுக் குழு | 16 |
| (iii) | சிறப்புரிமைகள் பற்றிய குழு | 16 |
| (iv) | உயர் பதவிகள் பற்றிய குழு | 16 |
| (v) | நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு | 16 |
| (vi) | அரசாங்கக் கணக்குகள் குழு | 16 - 20 |
| (vii) | அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு | 20 - 22 |
| (viii) | பொது மனுக்கள் பற்றிய குழு | 22 - 23 |

| | | |
|---|---|---|
| 6.3 | விசேட குழுக்கள் | 23 - 25 |
| 6.4 | சட்டமூல அலுவலகம் | 25 - 28 |
| 6.5 | சபை ஆவண அலுவலகம் | 28 - 29 |
| 6.6 | பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம் | 29 |
| 6.7 | பாராளுமன்ற நூலகம் | 30 - 31 |
| 7. | படைக்கலச் சேவிதர் திணைக்களம் | 31 - 33 |
| 8. | நிருவாக திணைக்களம் | 33 - 35 |
| 9. | ஹன்சாட் திணைக்களம் | 35 - 36 |
| 10. | இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் | 36 |
| 11. | தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம் | 37 |
| 12. | உள்ளகக் கணக்காய்வு அலுவலகம் | 37 - 38 |
| 13. | வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம் | 38 - 40 |

**பாராளுமன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு -** படக்குறிப்பு - (பின்னிணைப்பு – 01)

# இலங்கைப் பாராளுமன்றம்

## தலைப்பு இலக்கம் - 16

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2017

### 1. பணிகள்

சட்டம் இயற்றுபவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நாட்டின் பொதுநிதிப் பயன்பாட்டை நுணுக்கமாக ஆராய்பவர்கள் என்ற வகையில், தமது பணிகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறன் மிக்கதாகவும் நிறைவேற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவும் செயல் நடைமுறை ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.

### 2. பிரதான தொழிற்பாடுகள்

(i) மக்களின் சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகித்தல்

(ii) அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்

(iii) நிறைவேற்றுத்துறையை மேற்பார்வை செய்தல்

### 3. நிறுவனக் கட்டமைப்பு

கௌரவ சபாநாயகரின் தலைமையிலான பாராளுமன்றத்தின் கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான செயலக மற்றும் பணியாளர் சேவைகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் பின்வரும் திணைக்களங்களைக் கொண்டுள்ளது.

**(பின்னிணைப்பு 01 இல் நிறுவனக் கட்டமைப்பைப் பார்க்க)**

1. படைக்கலச் சேவிதர் திணைக்களம்
2. நிர்வாகத் திணைக்களம்
3. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்
4. ஹன்சாட் திணைக்களம்
5. இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்
6. நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்
7. உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்
8. தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

## 3.1 படைக்கலச் சேவிதர் திணைக்களம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் சேவைகளை முடியுமான வரை உயர்ந்த தரத்தில் காலத்துக்கு உகந்ததும் வினைத்திறன் மிக்கதுமானதொரு முறையில் வழங்குவதன் மூலம் பாராளுமன்றத்தின் பயனுறுதியான தொழிற்பாட்டுக்கு உதவுதல்:

- வைபவரீதியான கடமைகள், பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் ஒழுங்கைப் பேணுதல், செங்கோலின் பொறுப்பும் பாதுகாப்பும், பாராளுமன்ற கட்டடத்தினுள் விருந்தினர்களை அனுமதித்தல், கலரியை மேற்பார்வை செய்தல்
- பாராளுமன்றக் கட்டடத்தைப் பேணுதல் மற்றும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியினுள் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல்
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் மூப்புரிமை நிரலைத் தயாரித்து பாராளுமன்ற சபா மண்டபத்தில் அதற்கேற்ப ஆசன ஒதுக்கீடு செய்தல், ஆசன ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

## 3.2 நிர்வாகத் திணைக்களம்

- சட்டம் இயற்றுதல், மேற்பார்வை மற்றும் பொதுநிதி முகாமைத்துவத்தின் மீதான பாராளுமன்ற உறுப்பினர்களின் விடயப்பொறுப்பினை நிறைவேற்றுமுகமாக, அவர்களுக்கு வினைத்திறன் மிக்கதும் உயர் தரத்திலுமான சேவையை வழங்கக்கூடிய மிகவும் உகந்த ஆளணியினரை பணியாட்டொகுதியில் ஆட்சேர்த்தல், பதவியுயர்த்துதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளிட்ட பணியாட்டொகுதியின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஆளணியினரின் அறிவு, இயலுமை மற்றும் இயலளவினை மேம்படுத்துவதற்கான மனித வள முகாமைத்துவம், மொழித் தேர்ச்சி, கணினி, சமையற்கலை பாடநெறிகள், கணக்கீடு, நூலக சேவைகள் போன்ற விடயத்துடன் இணைந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் பணியாட்டொகுதியின் ஆக்கபூர்வமான மனப்பாங்குகளை மேம்படுத்துவதன் மூலம் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல் தொடர்பிலான நடவடிக்கைகள் நிர்வாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- இவற்றுக்கு மேலதிகமாக, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது பதவிகளில் கடமையாற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகளை உயர் தரத்திலும் துரிதமாகவும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாராளுமன்ற பணியாட்டொகுதியினரின் போக்குவரத்து பற்றிய நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் ஆகியனவும் நிர்வாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாகத் திணைக்களத்தின் பணிகளை ஆற்றுவதற்குப் பின்வரும் அலுவலகங்கள் பங்களிப்புச் செய்கின்றன:

    1. தாபன அலுவலகம்
    2. உறுப்பினர் சேவைகள் அலுவலகம்
    3. போக்குவரத்து அலுவலகம்

### 3.3 ஹன்சாட் திணைக்களம்

♦ பாராளுமன்ற அமர்வுகள், பாராளுமன்றக் குழுக்கள், மாநாடுகள், பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு மற்றும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாடுகள் ஆகியவற்றின் பக்கச்சார்பற்றதும், துல்லியமானதும், உரிய காலத்திலானதுமான அறிக்கையிடுதலையும், சூசிகை இடுதலையும் ஒலிப் பதிவுகளைக் கண்காணித்தலையும் உறுதிப்படுத்தல்.

### 3.4 இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

♦ தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான ஒரு பொதுச்சொத்து என்ற வகையில் பாராளுமன்றக் கட்டிடம் பாதுகாக்கப்படுவதையும், அது பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனுடனும் பராமரிக்கப்படுவதையும் பேணப்படுவதையும் உறுதிப்படுத்துவதை இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் மேற்கொள்கின்றது.

♦ பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை பயனுறுதியுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் நவீன, வினைத்திறன் மிக்க பணிபுரியும் சூழலை வழங்குதல்.

### 3.5 உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

♦ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் விருந்தினர்களுக்கும் உணவுகளையும் பானங்களையும் வழங்குதல்.

♦ உணவகங்களையும் சமையலறைகளையும் முகாமைத்துவம் செய்தல்

♦ கட்டிடத்தின் உள்ளக மற்றும் வெளிப்புற அழகு வேலைப்பாடுகள், துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பராமரிப்புப் பணிகளை முன்னெடுத்தல்.

### 3.6 நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

♦ வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தல், செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானத்தைத் திரட்டுதல் மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு; கணக்கீடு, இறுதிக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல்;

♦ பாராளுமன்றத்துக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் கொள்வனவு வழங்கல் பணிகளை நிருவகித்தல்.

♦ பாராளுமன்ற உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், பணியாட் டொகுதியினர், ஓய்வூதியம் பெறுநர்கள், அமைய மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்.

♦ வழங்குநர்களுக்கும் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களத்தின் கீழ் பின்வரும் பிரிவுகள் தொழிற்படுகின்றன:

1. நிதி, கணக்குகள் அலுவலகம்
2. வழங்கல்கள், சேவைகள் அலுவலகம்
3. உணவு வழங்கல், கணக்கீட்டு அலுவலகம்

## 3.7 சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

சட்டமியற்றுதல் மற்றும் பொது நிதிப் பாவனையை மேற்பார்வைசெய்தல் ஆகிய துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொழில்சார் சேவைகளை வழங்குகின்றது.
பின்வரும் பிரிவுகள் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன:

1. சபை ஆவண அலுவலகம்
2. சட்டமூல அலுவலகம்
3. குழு அலுவலகம் I
4. குழு அலுவலகம் II
5. அரசாங்கக் கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு அலுவலகம்
6. பொது மனுக் குழு அலுவலகம்
7. உரைபெயர்ப்பாளர் அலுவலகம்
8. நூலகம்

## 3.8 தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனாக முன்னெடுத்தல், இணையப் பாவனையை மேம்படுத்துதல், பாராளுமன்ற இணையத்தளத்தை வினைத்திறனாகவும், பயனுறுதிமிக்க வகையிலும் பேணுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், பாராளுமன்ற இணையத் தளத்தை பேணிவருதல், இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பேணிவருதல் ஊடாக :

♦ பாராளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகத்தின் அனைத்து தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## 3.9 வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகமும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் செயலாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுகின்றன.

## 4. பணியாட்டொகுதி விபரங்கள்

2017 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும் தற்போது சேவையிலுள்ள ஆளணியும் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | | | | தற்போதுள்ள ஆளணி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பா.செ.நா. | கௌரவ சபாநாயகர் | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. | பா.செ.நா | கௌரவ சபாநாயகர் | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. |
| சிரேஷ்ட மட்டம் | 57 | 8 | 5 | 5 | 55 | 8 | 5 | 5 |
| மூன்றாம் நிலை மட்டம் | 163 | 0 | 0 | 0 | 148 | 0 | 0 | 0 |
| இரண்டாம் நிலை மட்டம் | 235 | 9 | 6 | 3 | 202 | 9 | 6 | 3 |
| ஆரம்ப மட்டம் | 474 | 25 | 10 | 9 | 450 | 25 | 10 | 9 |
| அமய/ தற்காலிக | 03 | 03 | 0 | 0 | 02 | 03 | 0 | 0 |
| மொத்தம் (2017.12.31ஆம் திகதி உள்ளவாறு) | 932 | 45 | 21 | 17 | 857 | 45 | 21 | 17 |

## 5. வருடாந்த செயலாற்றுகை

### 5.1 நிதி நிர்வாகம் - 2017 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள்:-

2017 ஆம் ஆண்டுக்கான தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் அந்த நிதி ஏற்பாடுகள் செலவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு:-

ம.ஜீ.எஸ்.ஏ.-1

**ஒதுக்கீட்டுக் கணக்கு 2017**

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி ம.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | | | | | | | |
| 1 | கௌரவ சபாநாயகரின் அலுவலகம் | 168,950,000 | 47,860,000 | 0 | 216,810,000 | 200,918,831 | 15,891,169 | 40 |
| 2 | தாபனச் சேவைகள் | 1,129,717,000 | 188,900,000 | 14,800,000 | 1,333,417,000 | 1,316,361,300 | 17,055,700 | 40 |
| 3 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான | 625,800,000 | 320,800,000 | -14,800,000 | 931,800,000 | 926,254,184 | 5,545,816 | 40 |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | 1,924,467,000 | 557,560,000 | 0 | 2,482,027,000 | 2,443,534,315 | 38,492,685 | |
| | மூலதனம் | | | | | | | |
| 1 | கௌரவ சபாநாயகரின் அலுவலகம் | 4,500,000 | | | 4,500,000 | 2,238,669 | 2,261,331 | 41 |
| 2 | தாபனச் சேவைகள் | 125,500,000 | 392,221,430 | 0 | 517,721,430 | 395,052,560 | 122,668,870 | 42 |
| 3 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான | 800,000 | 0 | | 800,000 | 449,777 | 350,223 | 43 |
| | உப மொத்தம் (மூலதனம்) | 130,800,000 | 392,221,430 | 0 | 523,021,430 | 397,741,006 | 125,280,424 | |
| | முழு மொத்தம் | 2,055,267,000 | 949,781,430 | 0 | 3,005,048,430 | 2,841,275,321 | 163,773,109 | |

பக்க இலக்கம் 40 முதல் 71 வரை ம.ஜீ.எஸ்.ஏ 2 முதல் ம.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் 72 முதல் 75 உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்: தம்மிக்க தஸநாயக்க
பதவி: பாராளுமன்ற செயலாளர் நாயகம்
திகதி: 22.03.2018
W. B. D. DASANAYAKE
Secretary General of Parliament
Parliament

பணிப்பாளர் (நிதி)
பெயர்: கே. ஜீ. எம். ஜெயசாந்த
திகதி: 2018.03.21
K. G. MERWIN JAYASHANTHA
Director (Finance)
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura Kotte.

# நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2017

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் 1 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் சுருக்கம்

| செலவினத்தின் தன்மை (டீ.ஜீ.எஸ்.ஏ.மாதிரிப் படிவத்துடன்) | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டீ.ஜீ.எஸ்.ஏ. 3) | 1,924,467,000 | 557,560,000 | 0 | 2,482,027,000 | 2,443,534,315 | 38,492,685 | 38 |
| (ஆ) மூலதனம் (டீ.ஜீ.எஸ்.ஏ.4) | 130,800,000 | 392,221,430 | 0 | 523,021,430 | 397,741,006 | 125,280,424 | 39-41 |
| மொத்தம் | 2,055,267,000 | 949,781,430 | 0 | 3,005,048,430 | 2,841,275,321 | 163,773,109 | |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 2018.03.27

# கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 1 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கருத்திட்ட இலக்கம் 01: கௌரவ சபாநாயகரின் அலுவலகம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 60,300,000 | 22,860,000 | 840,000 | 84,000,000 | 70,864,414 | 13,135,586 |
| ஏனைய செலவினம் | 108,650,000 | 25,000,000 | -840,000 | 132,810,000 | 130,054,417 | 2,755,583 |
| **உப மொத்தம்** | **168,950,000** | **47,860,000** | 0 | **216,810,000** | **200,918,831** | **15,891,169** |
| **கருத்திட்ட இலக்கம் 2 : தாபன சேவைகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 737,200,000 | 151,700,000 | 0 | 888,900,000 | 874,685,682 | 14,214,318 |
| ஏனைய செலவினம் | 392,517,000 | 37,200,000 | 14,800,000 | 444,517,000 | 441,675,617 | 2,841,383 |
| **உப மொத்தம்** | **1,129,717,000** | **188,900,000** | **14,800,000** | **1,333,417,000** | **1,316,361,299** | **17,055,701** |
| **கருத்திட்ட இலக்கம் 3 : கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 100,000,000 | 20,000,000 | 0 | 120,000,000 | 118,100,825 | 1,899,175 |
| ஏனைய செலவினம் | 525,800,000 | 300,800,000 | -14,800,000 | 811,800,000 | 808,153,359 | 3,646,641 |
| **உப மொத்தம்** | **625,800,000** | **320,800,000** | **-14,800,000** | **931,800,000** | **926,254,184** | **5,545,816** |
| **முழு மொத்தம்** | **1,924,467,000** | **557,560,000** | 0 | **2,482,027,000** | **2,443,534,314** | **38,492,686** |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 2018.03.23

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - கௌரவ சபாநாயகரின் அலுவலகம்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 1,000,000 | 0 | 0 | 1,000,000 | 836,190 | 163,810 |
| 2002 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000 | 0 | 0 | 500,000 | 109,727 | 390,273 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 2,000,000 | 0 | 0 | 2,000,000 | 578,112 | 1,421,888 |
| | | | மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு | | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 500,000 | 0 | 0 | 500,000 | 253,983 | 246,017 |
| 2103 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000 | 0 | 0 | 500,000 | 460,657 | 39,343 |
| | | | மொத்தம் | 4,500,000 | 0 | 0 | 4,500,000 | 2,238,669 | 2,261,331 |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 2018.03.23

டீ.ஜீ.எஸ்.ஏ. - 4

## கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 02 - தாபனச் சேவைகள்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்க | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை** | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 1,000,000 | | 0 | 1,000,000 | 895,073 | 104,927 |
| 2002 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 2,500,000 | | 0 | 2,500,000 | 2,072,875 | 427,125 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | | 0 | 1,000,000 | 465,121 | 534,879 |
| | | | **மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு** | | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 65,221,430 | 0 | 65,221,430 | 65,221,422 | 8 |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 6,000,000 | | 0 | 6,000,000 | 5,028,846 | 971,154 |
| 2103 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 10,000,000 | | 0 | 10,000,000 | 9,430,454 | 569,546 |
| | | | **மனித வள அபிவிருத்தி** | | | | | | |
| 2401 | | 11 | அறிவு மேம்படுத்தலும் கட்டியெழுப்புதலும் | 5,000,000 | | | 5,000,000 | 4,938,346 | 61,654 |
| | | | **பாராளுமன்றக் கட்டிடதொகுதி புதுப்பித்தல்** | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 100,000,000 | 60,000,000 | | 160,000,000 | 140,000,423 | 19,999,577 |
| 2506 | | 11 | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | | 167,000,000 | | 167,000,000 | 167,000,000 | 0 |
| 2509 | | 11 | துறை சார் மேற்பார்வைக் குழுக்கள் அடங்கலாக பாராளுமன்ற நவீனமாக்கல் | | 100,000,000 | | 100,000,000 | 0 | 100,000,000 |
| | | | **மொத்தம்** | 125,500,000 | 392,221,430 | 0 | 517,721,430 | 395,052,560 | 122,668,870 |

பணிப்பாளர் (நிதி)

2018.03.23

# கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: 16 அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 03 - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகள்

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | புனர்வாழ்வளிப்பும் மூலதன சொத்துக்களின் மேம்படுத்துகை | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்களும் கட்டமைப்புகளும் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | | | மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு | | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 300,000 | 0 | 0 | 300,000 | 141,110 | 158,890 |
| 2103 | | 11 | தொழிற்சாலை, இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000 | 0 | 0 | 500,000 | 308,667 | 191,333 |
| | | | மொத்தம் | 800,000 | 0 | 0 | 800,000 | 449,777 | 350,223 |

பணிப்பாளர் (நிதி)

திகதி : 2018. 03. 22

**அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு:-**

**2017**ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான “அரசாங்க அலுவலர் முற்பண “பி” கணக்கின்” அனுமதிக்கப்பட்ட வரையறையும் உண்மைத் தொகையும் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | அனுமதிக்கப்பட்ட வரையறை 2017 (ரூபா.) | உண்மைத் தொகை 2017 (ரூபா.) | |
|---|---|---|---|
| செலவினங்களின் உச்ச வரையறை | 39,000,000 | 01601-1 | 38,432,250.00 |
| | | 01601-2 | 1,123,921.00 |
| பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை | 30,000,000 | 01601-1 | 31,312,719.81 |
| | | 01601-2 | 0.00 |
| உச்ச வரவு மீதி | **175,000,000** | | **130,571,436.39** |

## 6. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

## 6.1 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்

2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய 16 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதோடு அதில் கீழே காட்டப்பட்ட 10 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பான பணிகள் குழு அலுவலகம் I மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கமைய ஒவ்வொரு குழுவினாலும் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பொறுப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | துறைசார் மேற்பார்வைக் குழு | நடாத்தப் பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | ஆராய்தல்களின் எண்ணிக்கை | | | | பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சட்டமூலங்கள் | கட்டளைகள்/ ஒழுங்குவிதிகள் | பிரேரணைகள்/குறை நிரப்பு மதிப்பீடுகள் | வருடாந்த / செயலாற்றுகை அறிக்கைகள் | |
| 01 | சர்வதேச உறவுகள் பற்றிய | 10 | 1 | 4 | - | 18 | 7 |
| 02 | தேசிய பாதுகாப்பு பற்றிய<br><u>துணைக் குழு</u><br>• மோட்டார்வாகன முகாமைத்துவம் பற்றிய | 3<br><br>9 | | 2 | | | 1 |
| 03 | பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய<br><u>செயலமர்வுகள்</u><br>• மகப்பேற்று சுகாதாரக் கல்வி பற்றிய செயலமர்வு | 13 | | | | 5 | 2 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | • பொதுநலவாய செயலாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட செயற்பாட்டுத் தொடர் | | | | | | |
| 04 | கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய<br>துணைக்குழுக்கள்<br>• உயர்கல்வி பற்றிய<br>• கல்வி பற்றிய | 20<br><br>30<br>2 | | 5 | | 87 | 10 |
| 05 | போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய | 24 | 3 | 5 | 1 | 24 | 9 |
| 06 | கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய | 14 | | 1 | - | 48 | 3 |
| 07 | சட்ட அலுவல்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் பற்றிய | 20 | 6 | 3 | - | 1 | 9 |
| 08 | வியாபாரம் மற்றும் வாணிப அலுவல்கள் பற்றிய<br>துணைக்குழு<br>- இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி | 8<br><br>1 | 2 | 2 | | 20 | 4 |
| 09 | வலுசக்தி தொடர்பான<br>துணைக் குழு<br>• மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பற்றிய | 10<br><br>10 | 1 | | | 5 | 3 |
| 10 | உற்பத்தி மற்றும் சேவைகள் பற்றிய<br>துணைக் குழு<br>• சீமேந்து உற்பத்தி தொடர்பான அரச நிறுவனங்களை மேம்படுத்துவது தொடர்பாக | 06<br><br>2 | | | | 18 | 4 |

பின்வரும் துறைசார் மேற்பார்வைக்கழுக்கள் 6 தொடர்பான விடயங்கள் குழு அலுவலகம் II இனால் நிறைவேற்றப்படுகின்றது.

அதற்கமைய ஒவ்வொரு குழுவினாலும் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பொறுப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | துறைசார் மேற்பார்வைக் குழு | நடாத்தப் பட்ட கூட்டங்கஎின் எண்ணிக் கை | ஆராய்தல்களின் எண்ணிக்கை | | | | பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சட்டமூலங்கள் | கட்டளைகள்/ ஒழுங்குவிதிகள் | பிரேரணைகள்/குறை நிரபப்பு மதிப்பீடுகள் | வருடாந்த / செயலாற்றுகை அறிக்கைகள் | |
| 01 | பொருளாதார அபிவிருத்தி பற்றிய | 23 | 03 | 11 | - | 62 | 16 |
| 02 | நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் சுற்றாடலும் இயற்கை வளங்களும் பற்றி | 09 | 02 | 01 | - | 26 | 05 |
| 03 | சுகாதாரம் மற்றும் மனித நலனோம்புகை சமூக வலுவூட்டல் பற்றி<br>துணைக்குழுக்கள்<br>மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி பற்றி | 10<br><br>05 | 01<br><br>- | 06 | - | 40 | 09 |
| 4 | இளைஞர், விளையாட்டுத்துறை, கலைகள் மற்றும் மரபுரிமைகள் பற்றிய | 10 | 01 | 2 | - | 18 | 05 |
| 5 | உள்ளக நிருவாக மற்றும் அரச முகாமைத்தும் பற்றிய | 12 | 07 | 01 | - | 23 | 07 |
| 6 | நல்லிணக்க மற்றும் வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவது பற்றிய செயலமர்வுஇலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட “கருத்துப் பரிமாற்றம் பற்றிய செயலமர்வு” | 05 | - | - | - | 06 | 1 |

## 6.2 விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள்

### (i) அரசாங்க நிதி பற்றிய குழு

கௌரவ எம்.ஏ. சுமந்திரனின் தலைமையிலான இக் குழுவில் 20 பேர் அங்கத்துவம் வகிப்பதோடு 2017 ஆம் ஆண்டினுள் 30 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

- 5 சட்டமூலங்கள்
- 5 கட்டளைகள்
- 40 ஒழுங்குவிதிகள்
- 9 அறிவித்தல்கள்
- 9 பிரேரணைகள்

- 34 வருடாந்த அறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் அத்துடன் ஏனைய 13 குறிப்புகள் ஆராயப்பட்டதோடு அவை தொடர்பான 16 அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும்போது அடிப்படையாகக்கொள்ளப்பட்ட அரச நிதி, நிதியியல் மற்றும் பொருளாதார கருதுகோள்கள் பற்றிய மதிப்பீட்டறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

**(ii) தெரிவுக் குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆகும் என்பதுடன், 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(iii) சிறப்புரிமைகள் பற்றிய குழு**

கௌரவ திலக் மாரபன அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டு உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல்கள் 9 தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**(iv) உயர் பதவிகள் பற்றிய குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 19 கூட்டங்கள் நடாத்தப்பட்டு:

- 6 வெளிநாட்டு இராஜதந்திர பிரதானிகளின் நியமனங்கள்
- 33 அமைச்சு செயலாளர் நியமனங்கள்
- 82 நிறுவனத் தலைவர் நியமனங்கள் தொடர்பில் குழுவின் முன் அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசோதிக்கப்பட்டன.

**(v) நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு**

கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டு குழுவினால் விதந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு, நிலையியல் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

**(vi) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு**

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது 2017ஆம் ஆண்டினுள் 50 நிறுவனங்களை குழுவின் முன் அழைத்து 56 விசாரணைகளையும், 5 துணைக்குழுக் கூட்டங்களையும், 2 விசேட

கலந்துரையாடல்களையும் விசேட விடயங்கள் பற்றிய 3 புலனாய்வுகளையும் நடாத்தி அரசாங்க நிறுவனங்களின் செயலாற்றுகை மற்றும் நிதிக் கட்டுப்பாட்டை முறைப்படுத்த தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

**2017 ஆம் ஆண்டில் கணக்குகள் குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட விசேட / புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

(அ) 2015 ஆம் நிதி ஆண்டுக்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் காணப்பட்ட 831 ஆன அனைத்து அரச நிறுவனங்களினதும் நிதிக் கட்டுப்பாட்டையும் செயலாற்றுகையையும் முறைப்படுத்தும் மற்றும் மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் புதிய கணினி தகவல் முகாமைத்துவ முறைமையொன்றினூடாக இணையவழி மூலம் தகவல்களைப் பெற்று அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நிறுவனங்களும் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டன. மேற்படி மதிப்பீட்டுக்கமைய உயர் செயலாற்றுகை மட்டத்தைக் கொண்டுள்ள நிறுவனங்ளை பாராட்டுவதற்காக அதிமேதகு சனாதிபதியினதும், கௌரவ பிரதம அமைச்சரினதும் மற்றும் கௌரவ சபாநாயகரினதும் தலைமையில் விருது வழங்கும் வைபவமொன்று நடாத்தப்பட்டது.

(ஆ) இவ் வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக 2016 ஆம் நிதி ஆண்டின் பொருட்டும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகையை பற்றி மதிப்பிடுவதற்காக மேற்படி கணினி தகவல் முகாமைத்துவ முறைமையினூடாக இணையவழி மூலம் தகவல்களை பெற்றுக்கொள்கின்ற செயற்பாடும் பூர்த்தி செய்யப்பட்டது.

**<u>துணைக்குழுக்களை நியமித்தல்</u>**

இலங்கையின் கரையோரம் பேணல் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பான விதப்புரைகளை சமர்ப்பிக்க கௌரவ சுஜீவ சேனசிங்கவின் தலைமையிலான துணைக் குழுவொன்று 2017 சனவரி 24 ஆம் திகதி நியமிக்கப்பட்டதோடு தற்போது இக் குழுவின் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

<u>குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்</u>

2015 ஆம் நிதியாண்டை அடிப்படையாக்கொண்டு கணினி தகவல் முகாமைத்துவ முறைமையினூடாக இணையவழி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட 831 நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை மதிப்பீடு பற்றிய தகவல்கள் அடங்கிய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை 2017 நவெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் 2017.01.24 ஆம் திகதி முதல் 2017.05.24 ஆம் திகதி வரை புலனாய்வுக்குட்படுத்தப்பட்ட புலனாய்வுகள் அடங்கிய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் நான்காவது அறிக்கை 2017 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2017 ஆம் ஆண்டினுள் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்.**

| இல. | நிறுவனத்தின் பெயர் | புலனாய்வு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| 01. | ஆட்பதிவுத் திணைக்களம் | 2017.01.24 |
| 02. | கரையோரம் பேணல் திணைக்களம் | 2017.01.24 |
| 03. | போக்குவரத்து அமைச்சு | 2017.01.25 |
| 04. | தென் மாகாண சபை | 2017.01.25<br>2017.11.07 |
| 05. | கொழும்பு மாவட்ட செயலகம் | 2017.01.26 |
| 06. | கம்பஹா மாவட்ட செயலகம் | 2017.01.26 |
| 07. | இரத்தினபுரி மவாட்ட செயலகம் | 2017.02.21 |
| 08. | தபால் அமைச்சு | 2017.02.22 |
| 09. | தபால் திணைக்களம் | 2017.02.22 |
| 10. | நகல திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 2017.02.23 |
| 11. | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு | 2017.03.07 |
| 12. | மோட்டா வாகன போக்குவரத்து திணைக்களம் | 2017.03.07<br>2017.04.04<br>2017.06.06<br>2017.07.25<br>2017.10.17 |
| 13. | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 2017.03.09 |
| 14. | ஆயுர்வேத திணைக்களம் | 2017.03.09<br>2017.08.09 |
| 15. | கொழும்பு மாநகர சபை | 2017.03.10 |
| 16. | மத்திய மாகாண சபை | 2017.03.10 |
| 17. | களுத்துறை மாவட்ட செயலகம் | 2017.03.21 |
| 18. | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2017.03.22 |
| 19. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 2017.03.22 |
| 20. | ஊவா மாகாண சபை | 2017.03.23 |
| 21. | வட மத்திய மாகாண சபை | 2017.03.23 |
| 22. | பௌத்த சாசனஅமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 2017.03.24 |
| 23. | ஊழியர் சேமலாப நிதியம் | 2017.03.24 |

| | | |
|---|---|---|
| 24. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 2017.04.05 |
| 25. | கிழக்கு மாகாண சபை | 2017.04.05 |
| 26. | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு மற்றும் ஓய்வுதிய திணைக்களம் | 2017.05.03 |
| 27. | கடற்றொழில் நீரக வளமூலங்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி திணைக்களம் | 2017.05.04 |
| 28. | விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 2017.05.05 |
| 29. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 2017.05.23 |
| 30. | உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 2017.05.24<br>2017.09.08 |
| 31. | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைசசு | 2017.09.21 |
| 32. | இடர் முகாமைத்துவ அமைச்சு | 2017.06.22 |
| 33. | வளிமண்டலவியல் திணைக்களம் | 2017.06.22 |
| 34. | பாணந்துறை நகர சபை | 2017.07.04 |
| 35. | கேகாலை மாவட்ட செயலகம் | 2017.07.07 |
| 36. | விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவருத்தி திணைக்களம் | 2017.07.26 |
| 37. | களுத்துறை பிரதேச சபை | 2017.07.27 |
| 38. | மாத்தளை மாவட்ட செயலகம் | 2017.07.17 |
| 39. | பௌத்த சாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 2017.08.09 |
| 40. | வடக்கு மாகாண சபை | 2017.09.07 |
| 41. | காத்தான்குடி நகர சபை | 2017.09.19 |
| 42. | ஏறாவூர் நகர சபை | 2017.09.19 |
| 43. | கொழும்பு மாநகர சபை | 2017.10.20 |
| 44. | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2017.11.16 |
| 45. | கல்வி அமைச்சு | 2017.11.17 |
| 46. | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 2017.12.08 |
| 47. | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு | 2017.12.08 |
| 48. | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2017.12.08 |
| 49. | சிறைச்சாலைகள் திணைக்களம் | 2017.12.08 |
| 50. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் | 2017.12.08 |

**குழுவினால் விசேட செயாற்றுகைக் கணக்காய்வு பற்றி புலனாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விசேட குழுக் கூட்டங்கள்**

| இலக்கம் | புலனாய்வு செய்யப்பட்ட விடயங்கள் | புலனாய்வு செய்யப்பட்ட திகதிகள் |
|---|---|---|
| 01. | டெங்கு நோயை இல்லாதொழித்தல் பற்றிய செயலாற்றுகை கணக்காய்வு | 2017.03.08 |
| 02. | குடிநீர் போத்தல் பற்றிய செயலாற்றுகை கணக்காய்வு | 2017.03.08 |
| 03. | நெற் பயிற்செய்கைக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்குதல் பற்றிய செயலாற்றுகை கணக்காய்வு | 2017.07.06 |

| இலக்கம் | புலனாய்வு செய்யப்பட்ட விடயங்கள் | புலனாய்வு செய்யப்பட்ட திகதிகள் |
|---|---|---|
| 01. | இலங்கையில் கரையோரம் பேணல் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்காக நியமிக்கப்பட்ட துணைக்குழுவின் கூட்டங்கள் | 2017.02.22<br>2017.04.06<br>2017.08.10<br>2017.10-.06<br>2017.10.25 |

**<u>விசேட கலந்துரையாடல்கள்</u>**

| இலக்கம் | புலனாய்வு செய்யப்பட்ட விடயங்கள் | புலனாய்வு செய்யப்பட்ட திகதிகள் |
|---|---|---|
| 01. | 2016 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் வருடாந்த கணக்கு அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பற்றிய புலனாய்வு | 2017.06.09<br>2017.08.22 |

### (vii) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

2017 ஆம் ஆண்டில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பின்வரும் நிறுவனங்களின் செயலாற்றுகையையும் நடப்பு விடயங்களையும் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு குழுக் கூட்டங்கள் நடாத்தி அறிக்கைகளை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டது.

## குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்

இதற்கு மேலதிகமாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அதற்கு சாட்டப்பட்ட பணிகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்து குழு புலனாய்வு செய்த நிறுவனங்கள் சம்பந்தமாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய 03 அறிக்கைகளை 2017 பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி, ஏப்பிறல் மாதம் 07 ஆம் திகதி, மற்றும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி ஆகிய திகதிகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தது.

**2017 ஆம் ஆண்டில் குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்.**

| இல. | நிறுவனத்தின் பெயர் | புலனாய்வு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 2017.01.25 |
| 02 | இலங்கை கனிய மணல் கம்பனி | 2017.01.26 |
| 03 | தேசிய லொத்தர் சபை | 2017.02.07 |
| 04 | இலங்கை கனிய மணல் கம்பனி | 2017.02.07 |
| 05 | ஹிங்குரான சீனிக் கம்பனி | 2017.02.08 |
| 06 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 2017.02.09 |
| 07 | சுயாதீன தொலைக்காட்சி சேவை | 2017.02.21 |
| 08 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 2017.02.22 |
| 09 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 2017.03.07 |
| 10 | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | 2017.03.08 |
| 11 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 2017.03.09 |
| 12 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | 2017.03.10 |
| 13 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 2017.03.20 |
| 14 | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 2017.03.21 |
| 15 | அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் | 2017.04.06 |
| 16 | இலங்கை நிலக்கரி கம்பனி | 2017.04.07 |
| 17 | இலங்கை உப்புக் கம்பனி | 2017.05.03 |
| 18 | இலங்கை முதலீட்டுச் சபை | 2017.05.05 |
| 19 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 2017.05.23 |
| 20 | தேசிய கல்வி நிறுவகம் | 2017.05.25 |
| 21 | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 2017.06.06 |
| 22 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 2017.06.09 |
| 23 | லங்கா ஹொஸ்பிட்டல் | 2017.06.20 |
| 24 | கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனி | 2017.06.21 |
| 25 | கொழும்புப் பல்கலைக்கழகம் | 2017.07.04 |
| 26 | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் | 2017.07.05 |
| 27 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 2017.07.06 |
| 28 | அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் | 2017.07.07 |

| | | |
|---|---|---|
| 29 | ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 2017.07.25 |
| 30 | ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் | 2017.07.26 |
| 31 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 2017.08.08 |
| 32 | சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 2017.08.09 |
| 33 | இலங்கை விமான சேவை | 2017.08.10 |
| 34 | மில்கோ தனியார் கம்பனி | 2017.08.11 |
| 35 | இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் | 2017.08.22 |
| 36 | மில்கோ தனியார் கம்பனி | 2017.08.22 |
| 37 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 2017.08.23 |
| 38 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 2017.08.09 |
| 39 | தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை | 2017.08.25 |
| 40 | மில்கோ தனியார் கம்பனி | 2017.09.06 |
| 41 | இலங்கை விமான சேவை | 2017.09.06 |
| 42 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 2017.09.08 |
| 43 | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2017.09.19 |
| 44 | இலங்கை விமான சேவை | 2017.09.20 |
| 45 | றுகுணு பல்கலைக்கழகம் | 2017.09.21 |
| 46 | களனிப் பல்கலைக்கழகம் | 2017.09.22 |
| 47 | தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 2017.11.17 |
| 48 | கிழக்குப் பல்கலைக்கழகம் | 2017.11.22 |
| 49 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 2017.11.23 |
| 50 | வயம்ப பல்கலைக்கழகம் | 2017.11.28 |
| 51 | ஊவா பல்கலைக்கழகம் | 2017.11.29 |

### (viii) பொது மனுக்கள் பற்றிய குழு

2017 ஆம் ஆண்டில் குழுவின் முதலாவது கூட்டம் 2017.02.08 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன், மேற்படி ஆண்டில் 37 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டு, 348 மனுக்கள் ஆராயப்பட்டு, 105 மனுக்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த 105 மனுக் கோப்புக்களில் நிவாரணம் பெற்றுக் கொண்ட மனுதாரர்கள் 27 பேர் உள்ளார்கள் என்பதுடன், எஞ்சிய மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்க குழுவிற்கு ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக மேற்படி கோப்புக்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

பொது மனுக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக திருத்தப்படாத புள்ளிவிபரத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு குழுப் பணியகத்தற்குக் கிடைக்கப்பெற்ற மனுக்களின் மொத்த எண்ணிக்கை | - | 1062 |
| நிலையியற் கட்டளைகளுக்கு இணங்காள்ளமையின் காரணத்தினால் குழுப் பணியகத்தினால் நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 413 |
| மேல் நடவடிக்கைகளுக்காக பணியகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | | 649 |
| 2017 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - | 649 |

| | | |
|---|---|---|
| (2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்று மேற்படி ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படாது எஞ்சியிருந்த மனுக்களையும் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது)<br>புலனாய்வுக்காக நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | | 66 |
| குழு கூடிய தவணைகளின் எண்ணிக்கை<br>குழுவினால் ஆராயப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிககை<br>நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மனுதாரர்களின் எண்ணிக்கை<br>முடிவுறுத்தப்பட்டுள்ள மனுக்கோப்புக்களின் எண்ணிக்கை (நிவாரணம் வழங்கப்பட்டு / வழங்கப்படாத) | | 37<br>348<br>27<br>105 |

## 6.3 விசேட குழுக்கள்

**(i) நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் பற்றிய பாராளுமன்ற விசேட குழு**

பிரதி சபாநாயகர் கௌரவ திலங்க சுமதிபால அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டில் ஐந்து கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. குழுவின் நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன் ;

- கௌரவ நிரோஷன் பெரேரா
- கௌரவ புத்திக பத்திரண
- கௌரவ பிமல் ரத்நாயக்க
- கௌரவ அநுராத ஜயரத்ன

ஆகியோரது தலைமையில் 3 அங்கத்தவர்களைக் கொண்ட 4 குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன் குறித்த கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு இடைக்கால அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை விழிப்பூட்டுவதற்காக செயலமர்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

**(ii) பிரசீல் நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் அமெரிக்க ஐக்கியக் குடியரசின் நியுயோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி அலுவலகம் என்பவற்றுக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒவ்வொரு இடம் சார்பாகவும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக கண்டறிந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு**

கௌரவ ஆனந்த குமாரசிறி அவர்களின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆகும் என்பதுடன், 2017 ஆம் ஆண்டில் 7 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**(iii) 2018 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான பாராளுமன்ற விசேட செயற்குழு**

கௌரவ மஹிந்த சமரசிங்க தலைமைத்துவம் வகித்த இந்தக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆகும் என்பதுடன் 2017 ஆம் ஆண்டு 12 அமர்வுகளை நடத்தி 10 அமைச்சுச் செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டு இறுதி அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**(iv) வெளி நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்தற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு .**

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரள தலைமைத்துவம் வகிக்கும் இந்த குழுவின் அங்கத்தவர்களின் எண்னிக்கை 21 ஆகும் என்பதுடன் 2017 ஆம் ஆண்டு 4 அமர்வுகளை நடத்தி வெளிநாடுகளுக்கு சென்றுள்ள இலங்கையர்களுக்கு வாக்களிப்தற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழிமுறை தொடர்பாக ஒரு செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது. மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைக்கு குழுவின் அனுமதி கிடைத்துள்ளது .

**பணி குறித்துரைக்கப்பட்ட குழுக்கள்**

**பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம்**

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டாரவின் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்களான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகும் என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் 3 அமர்வுகள் நடத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டு மிகவும் தீவிரமாக செயற்பட்ட இந்தக் குழுவினால் ;

- கிளிநொச்சியில் சர்வதேச பெண்கள் தினத்தை அனுஷ்டிக்கும் நிகழ்வொன்றும்;
- பொது போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும்போது இடம்பெறும் பெண்களுக்கெதிரான இம்சைகளை இல்லாமல் செய்வதற்கான ஸ்டிக்கர்களை ஒட்டும் இயக்கமொன்றும்;
- அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக சமுதாயத்தில் விழிப்புணர்வூட்டுவதற்கான இரண்டு செயலமர்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

**சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம்**

கௌரவ (டாக்டர்) சுதர்ஷனீ பெர்னாந்துபுள்ளேயின் தலைமையிலான இக்குழுவின் செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 ஆகுமென்பதுடன் UNICEF நிறுவனத்தின் அனுசரணையுடன் முன் சிறுவர்பராய அபிவிருத்தி தொடர்பான பாராளுமன்ற மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்டது .

**6.4 சட்டமூல அலுவலகம்**

பாராளுமன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய சட்டவாக்க செயற்பணியான சட்டமியற்றும் நடைவடிக்கைமுறையை, அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்ட மூல அலுவலகத்தின் செயற்பணியாகும்.

இதன் கீழ் சட்டமூல அலுவலகத்தினால் அரசாங்க சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது முதல் மேற்படி சட்டங்களில் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்ட பின்னர் அச்சிடுவது வரை பூர்த்தி செய்யப்பட வேண்டிய சகல சட்டவாக்க படிமுறைகள் தொடர்பிலுமான நடவடிக்கைகள் மும்மொழிகளிலும் ஆற்றப்படுகின்றன.

மேலும் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பது முதல் மேற்படி சட்டங்களை அச்சிடும் வரையான நடவடிக்கைகளும் அவ்வாறே மும்மொழிகளிலும் ஆற்றப்படுகின்றன.

**2017 ஆம் ஆண்டினுள்,**

| | |
|---|---|
| சட்டமூல அலுவலகத்துக்கு கிடைத்த அரசாங்க சட்டமூல வர்த்தமான பத்திரிகைகளின் எண்ணிக்கை | 43 |
| பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க சட்டமூல வர்த்மான பத்திரிகைகளின் எண்ணிக்கை | 39 |
| சட்டமூல அலுவலகத்தினால் அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | 39 |
| வாபஸ் பெறப்பட்ட அரசாங்க சட்டமூலங்களின் எண்ணிக்கை | 02 |
| பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலங்களின் எண்ணிக்கை | 32 |
| கௌரவ சபாநாயகரினால் புறக்குறிப்பிடப்பட்ட அரசாங்க சட்டமூலங்களின் எண்ணிக்கை | 32 |
| தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை சமர்ப்பிப்பதற்காக சட்டமூல அலுவலகத்துக்கு கிடைத்த கோரிக்கைகளுக்கமைய பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூல வர்த்தமான பத்திரிகைகளின் எண்ணிக்கை | 32 |
| அமைச்சு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலங்களின் எண்ணிக்கை | 32 |

மாகாண சபைகளிடம் விடுத்த கோரிக்கைகளுக்கமைய பாராளுமன்றத்தின் அவதானிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்ட நியதிச்சட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை 01

2017 ஆம் ஆண்டில் அரசாங்க சட்டமூலங்களுடன் தொடர்புபட்டதாக நடத்தப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டங்களுக்கு சட்டமூல அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு தேவையான பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

## 2017 இல் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள்

| இல | சட்ட இல | சட்டத்தின் பெயர் | சான்றுறை இடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1 | 1/2017 | වෛද්‍ය (සංශෝධන)<br>மருத்துவம் (திருத்தம்)<br>Medical (Amendment) | 2017-02-21 |
| 2 | 2/2017 | දිවි නැගුම (සංශෝධන)<br>வாழ்வின் எழுச்சி (திருத்தம்)<br>Divineguma (Amendment) | 2017-02-21 |
| 3 | 3/2017 | ඉඩම් (සන්තකය පැවරීම සීමා කිරීමේ) (සංශෝධන)<br>காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்)<br>Land (Restriction on Alienation) (Amendment) | 2017-02-22 |
| 4 | 4/2017 | ශ්‍රී ලංකා ඉංජිනේරුවරුන්ගේ සභාව<br>இலங்கைப் பொறியியற் பேரவை<br>Engineering Council, Sri Lanka | 2017-03-09 |
| 5 | 5/2017 | අවලංගු කළ නොහැකි තෑගි ඔප්පු බලවත් අකෘතඥතාවය පදනම් කොටගෙන අවලංගු කිරීමේ<br>கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல்<br>Revocation of Irrevocable Deeds of Gift on the Ground of Gross Ingratitude | 2017-04-04 |
| 6 | 6/2017 | ජාතික ගමනාගමන කොමිෂන් සභා (සංශෝධන)<br>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்)<br>National Transport Commission (Amendment) | 2017-04-07 |
| 7 | 7/2017 | ආර්ථික සේවා ගාස්තු (සංශෝධන)<br>பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)<br>Economic Services Charge (Amendment) | 2017-05-17 |
| 8 | 8/2017 | සිවිල් නඩු විධාන සංග්‍රහය (සංශෝධන)<br>குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)<br>Civil Procedure Code (Amendment) | 2017-06-07 |
| 9 | 9/2017 | අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය (පිහිටුවීම, පරිපාලනය කිරීම සහ කර්තව්‍ය ඉටු කිරීම) (සංශෝධන)<br>காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும் நிருவகித்தலும் பணிளை நிறைவேற்றுதலும் (திருத்தம்)<br>Office on Missing Persons (Establishment, Administration and Discharge of Functions) (Amendment) | 2017-07-03 |
| 10 | 10/2017 | ඡන්ද හිමියන් ලියාපදිංචි කිරීමේ (විශේෂ විධිවිධාන) தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்)<br>Registration of Electors (Special Provisions) | 2017-07-21 |
| 11 | 11/2017 | ධීවර සහ ජලජ සම්පත් (සංශෝධන)<br>கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)<br>Fisheries and Aquatic Resources (Amendment) | 2017-07-25 |

| | | | |
|---|---|---|---|
| 12 | 12/2017 | විදේශ විනිමය<br>வெளிநாட்டுச் செலாவணி<br>Foreign Exchange | 2017-07-28 |
| 13 | 13/2017 | ජාතිය ගොඩනැගීමේ බදු (සංශෝධන)<br>நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)<br>Nation Building Tax (Amendment) | 2017-08-09 |
| 14 | 14/2017 | සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණය අධිකාරිය (සංශෝධන)<br>**சுகததாச** தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தம்)<br>Sugathadasa National Sports Complex Authority (Amendment) | 2017-08-17 |
| 15 | 15/2017 | ලංකා ජර්මානු කාර්මික අභ්‍යාස ආයතනය<br>இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப்ப பயிற்சி நிறுவகம்<br>Ceylon German Technical Training Institute | 2017-08-24 |
| 16 | 16/2017 | පළාත් පාලන ආයතන ඡන්ද විමසීම් (සංශෝධන)<br>உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)<br>Local Authorities Elections (Amendment) | 2017-08-31 |
| 17 | 17/2017 | පළාත් සභා ඡන්ද විමසීම් (සංශෝධන)<br>மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)<br>Provincial Councils Elections (Amendment) | 2017-09-22 |
| 18 | 18/2017 | මෝටර් වාහන (සංශෝධන)<br>மோட்டார் வாகனம் (திருத்தம்)<br>Motor Traffic (Amendment) | 2017-10-03 |
| 19 | 19/2017 | ශ්‍රී ලංකා තිරසර සංවර්ධන<br>இலங்கை நிலைபேறுதகு அபிவிருத்தி<br>Sri Lanka Sustainable Development | 2017-10-03 |
| 20 | 20/2017 | මහ නගර සභා (සංශෝධන)<br>மாநகர சபைகள் (திருத்தம்)<br>Municipal Councils (Amendment) | 2017-10-12 |
| 21 | 21/2017 | නගර සභා (සංශෝධන)<br>நகர சபைகள் (திருத்தம்)<br>Urban Councils (Amendment) | 2017-10-12 |
| 22 | 22/2017 | ප්‍රාදේශීය සභා (සංශෝධන)<br>பிரதேச சபைகள் (திருத்தம்)<br>Pradeshiya Sabha (Amendment) | 2017-10-12 |
| 23 | 23/2017 | රක්ෂණ කර්මාන්තය විධිමත් කිරීමේ (සංශෝධන)<br>காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்)<br>Regulation of Insurance Industry (Amendment) | 2017-10-19 |
| 24 | 24/2017 | දේශීය ආදායම්<br>உண்ணாட்டரசிறை<br>Inland Revenue | 2017-10-24 |
| 25 | 25/2017 | ඉලෙක්ට්‍රොනික ගනුදෙනු (සංශෝධන)<br>இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் (திருத்தம்)<br>Electronic Transactions (Amendment) | 2017-11-02 |
| 26 | 26/2017 | අධිකරණ සංවිධාන (සංශෝධන)<br>நீதித்துறை (திருத்தம்)<br>Judicature (Amendment) | 2017-11-17 |
| 27 | 27/2017 | අපරාධයක වින්දිතයන් සහ සාක්ෂිකරුවන් හට සහාය දීමේ සහ ආරක්ෂා කිරීමේ (සංශෝධන)<br>குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தம்)<br>Assistance to and Protection of Victims of Crime and Witnesses (Amendment) | 2017-11-17 |

| | | | |
|---|---|---|---|
| 28 | 28/2017 | පළාත් පාලන ආයතන (විශේෂ විධිවිධාන)<br>உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்)<br>Local Authorities (Special Provisions) | 2017-11-17 |
| 29 | 29/2017 | අපරාධ වැළැක්වීමේ (සංශෝධන)<br>குற்றச்செயல்களைத் தடுத்தல் (திருத்தம்)<br>Prevention of Crimes (Amendment) | 2017-11-18 |
| 30 | 30/2017 | විසර්ජන<br>ஒதுக்கீடு<br>Appropriation | 2017-12-09 |
| 31 | 31/2017 | පළාත් පාලන ආයතන ඡන්ද විමසීම් (සංශෝධන)<br>உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)<br>Local Authorities Elections (Amendment) | 2017-12-14 |
| 32 | 32/2017 | විසර්ජන (සංශෝධන)<br>ஒதுக்கீடு (திருத்தம்)<br>Appropriation (Amendment) | 2017-12-14 |

### 6.5 சபை ஆவண அலுவலகம்

(i) பாராளுமன்ற கூட்டங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பிரேரணைகள் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய 03 ஒழுங்குப் புத்தகங்களுடன் அவற்றுக்கான 24 அனுபந்தங்களும், 95 பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான ஒழுங்குப் பத்திரங்களும் கூட்ட அறிக்கைகளும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

(ii) அமைச்சுகள், அவற்றின் கீழ் உள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியன தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களினால் அனுப்பப்பட்ட, 437 செயலாற்றுகை மற்றும் வருடாந்த அறிக்கைகளையும், பல்வேறு சட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை உள்ளடக்கிய பிரேரணைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(iii) பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1074 வாய்மூல விடைக்கான வினாக்கள் பதிவு செய்யப்பட்டு நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க அவை தொகுக்கப்பட்டு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு, ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது உரியவாறு அனுபந்தங்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(iv) பாராளுமன்ற உறுப்பினர்களின் 18 தனியார் உறுப்பினர் பிரேரணைகள் மற்றும் 03 திகதியிடப்படாத பிரேரணைகள் பொறுப்பேற்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு, ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது உரியவாறு அனுபந்தங்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(v) பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் 43 அமர்வுகள் கூட்டப்பட்டு, இது பற்றிய கூட்ட அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிடவும், குறித்த தீர்மானங்களுக்கான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகள் இப்பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

(vi) சனாதிபதியிடமிருந்து கிடைத்த செய்தி ஒன்று, சபாநாயகரின் 86 அறிவித்தல்கள், அரசாங்கத்தின் 39 சட்டமூலங்கள் அடங்கலாக 51 சட்டமூலங்கள், சட்டமூலங்கள் தொடர்பில் உயர் நீதி மன்றத்தின் மற்றும் அமைச்சர்களின் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் உட்பட்டதாக பாராளுமன்றக் கூட்டங்களுக்கு ஏற்பான தினப்பணிகளை ஏற்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

(vii) 2017ஆம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு 06 அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு, குறித்த ஹன்சாட் அறிக்கை, அதன் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி, அழைப்புக் கடிதம், கூட்ட ஒழுங்குப்பத்திரம் என்பவற்றை காலமான உறுப்பினரது துணைவருக்கு அல்லது அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

6.6 பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம்

2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் பராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகத்தினால் ஆற்றப்பட்ட சேவைகள் பின்வருமாறு.

i) பாராளுமன்ற கூட்டம் நடைபெறுகின்ற நாட்களில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையினுள் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

ii) துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய குழு அறைகளில் நடாத்தப்பட்ட ஏனைய கூட்டங்களின் போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் குழுக் கூட்டங்களில் பங்கேற்கும் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கும் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

iii) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, பொது மனுக்குழு மற்றும் ஏனைய சமகால உரைபெயர்ப்பு வசதிகள் அற்ற குழு அறைகளில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் தமிழ் பேசும் உறுப்பினர்களுக்கு அருகிலிருந்து உரைபெயர்ப்பு சேவையினை வழங்குதல்.

iv) பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் வெளியிடப்படும் வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் மற்றும் எழுத்துமூல விடைகளுக்கான வினாக்களை சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்தல். 2017ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவிலும் மொழிபெயர்க்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| பிரிவு | மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்கள/ஆங்கில பிரிவு | 1019 |
| சிங்கள/தமிழ் பிரிவு | 1049 |
| தமிழ் / ஆங்கில பிரிவு | 11 |

2017ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ ஆவணங்கள் பல சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதோடு, ஒவ்வொரு பிரிவிலும் மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| பிரிவு | மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிங்கள/ஆங்கில பிரிவு | 1652 |
| சிங்கள/தமிழ் பிரிவு | 914 |
| தமிழ் / ஆங்கில பிரிவு | 858 |

### 6.7 பாராளுமன்ற நூலகம்:

2017ஆம் ஆண்டில் நூலகத்தின் பிரதான ஒன்றுதிரட்டில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் புதிய வெளியீடுகள் சேர்க்கப்பட்டன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| புத்தகங்கள் | - | 750 |
| பத்திரிகைகள் | - | 34 |
| வார சஞ்சிகைகள் | - | 14 |

நுலகத்தால் இலக்கமாக்கி (Digitize) செய்யப்பட்ட பல்வேறு விடயங்களுக்குரிய காலத்திற்கு ஏற்ற அரிய மற்றும் முக்கிய ஆவணங்களின் பிரதிகள் கௌரவ உறுப்பினர்களின் தேவை கருதி வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற நூலகத்தால் மாண்புமிகு பிரதம அமைச்சர், கௌரவ சபாநாயகர், அரசாங்கக் கட்சியின் கௌரவ முதற்கோலாசான், கௌரவ சபை முதல்வர், கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் உட்பட அமைச்சர்களுக்கு அவசியமான பல்வேறு தகவல் தேவைப்பாடுகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட்ட ஒட்டுமொத்த பணியாட்டொகுதியின் உத்தியோகபூர்வ அலுவல்களின்போது தேவைப்படும் பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டமையும் நூலகத்தால் ஆற்றப்பட்ட முக்கியமான பணியாகும்.

மேலும் சனாதிபதி அலுவலகம், அமைச்சுக்கள், திணைக்களங்கள் உட்பட பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நூலகத்தின் சட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்டதாக அரசு சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டதன் மூலம் நூலகம்தன் ஒத்துழைப்பினை மேலும் வளர்த்துக்கொண்டுள்ளது.

நூலகத்தால் வழங்கப்பட்ட புத்தகங்கள் உட்பட ஏனைய ஆவணங்களின் எண்ணிக்கை 1211 ஆகும்.

2017ஆம் ஆண்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புடைய அவசர தகவல் தேவைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் பல்வேறு ஆய்வு நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் போன்ற பல்வேறு தகவல் மூலங்களைப் பயன்படுத்தி மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் தகவல்களை உள்ளடக்கிய சுமார் 510 கோப்புகள் தயார் செய்து வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டு உறுப்பினர்களின் உடனடி ஆய்வுக்காக நாளாந்தம் வெளியாகின்ற தேசிய பத்திரிகைகள் மற்றும் வாரசஞ்சிகைகளிலிருந்து நடப்பு விவகார ரீதியில் முக்கியத்துவமிக்க பல்வேறு செய்திகள் மற்றும் ஆக்கங்கள் சுமார் 3000 இற்கும் அதிகமானவை பிரதிசெய்து மற்றும் ஸ்கேன் செய்து வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஹன்சாட் அறிக்கைகள், பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகங்கள், சட்டமூலங்கள், சட்டங்கள் போன்ற பாராளுமன்ற வெளியீடுகளிலிருந்தும் வர்த்தமானப் பத்திரிகை, அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள் போன்றவற்றின் அச்சிடப்பட்ட பிரதிகள் மற்றும் இலத்திரனியல் பிரதிகளிலிருந்து தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் சுமார் 100 வழங்கப்பட்டுள்ளன.

இம்முறையும் 2018ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற தினக்குறிப்பேடு திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்டது. அதன் 4200 பிரதிகள் (பெரிய அளவில் – 1200, நடுத்தர அளவில் – 3000) அரசாங்க அச்சுத் திணைக்களத்தைக் கொண்டு அச்சிடப்பட்டு கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதி சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தின் முழுமொத்த பணியாட்டொகுதி மற்றும் பாராளுமன்றத்துடன் இணைந்த ஏனைய பணியாட்டொகுதியினிடையே வினியோகம் செய்யப்பட்டன.

கடந்த ஆண்டில் நூலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் பின்வரும் கருமங்கள் ஆற்றப்பட்டன.

| | | |
|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கைகள் | - | 242 |
| கௌரவ சபாநாயகர்/ செயலாளர் நாயகம் அலுவலகத்தின் பணிகள் மற்றும் பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுக்கள் வெளிநாட்டு மாநாடுகளில் பங்கேட்கும் போது தேவையான உரைகளை தயார் செய்தல் | - | 72 |
| சட்டமூலங்களுக்கான பின்புல அறிக்கைகள் | - | 31 |
| தொழில்நுட்ப அறிக்கைகள் | - | 08 |
| ஆராய்ச்சி அறிக்கைகள் | - | 06 |
| பாராளுமன்ற ஆய்வுச் சஞ்சிகை | - | ம. 1 – இ. 6-1 |

## 7. படைக்கலச் சேவிதர் திணைக்களம்

பாராளுமன்ற செயன்முறையை நிறைவேற்றுவதற்கான வசதி ஏற்பாட்டின் பொருட்டு கௌரவ சபாநாயகர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பணியாட்டொகுதியினர், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர் மற்றும் இணைந்த பணியாட்டொகுதியினர் ஆகிய பிரிவுகளுக்கு சேவைகளை வழங்குவது இத்திணைக்களத்தின் நோக்கமாகும்.

2017ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான கருமங்கள் :-

### (i) பாதுகாப்பு அலுவல்கள்

பாராளுமன்றத்தின் பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் பேணும் அதேசமயம், முன்பாதுகாப்பு பற்றிய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை 2010ஆம் ஆண்டிலிருந்து ஓரளவுக்கு தளர்த்த முடிந்தது. கௌரவ சபாநாயகரின் அறிவுறுத்தல்களின் பேரில் அந்த வேலைத்திட்டம் 2017ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் பேணும் அதேசமயம், ஒரு சில பாதுகாப்பு ஏற்பாடுகளை 2017 ஆம் ஆண்டில் தளர்த்த முடிந்ததுடன், இது தொடர்பிலான தீர்மானங்கள் குறித்து கௌரவ உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் மூலம், கௌரவ உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாட்டொகுதியினர் மற்றும் கடமை நிமித்தம் பாராளுமன்றத்துக்கு வருகை தரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் பொதுமக்களுக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர விடயங்களின் கீழ் பாராளுமன்ற பணியாட்டொகுதி மற்றும் இணைந்த பணியாட்டொகுதிக்கு செயலமர்வுகள், கருத்தரங்குகள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டதோடு படைக்கலச் சேவிதர் திணைக்கள ஊழியர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**(ii) விசேட அதிதிகள் வருகை ( VIP Visits)**

2017 ஆம் ஆண்டில் விசேட விருந்தினர்களின் வருகை சுமார் 560 ஆகக் காணப்பட்டது.

**(iii) பல்வேறு வகுதிகளுக்குரிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்**

(அ) வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் (அண்ணளவாக)

| அரச உத்தியோகத்தர் களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | அரச உத்தியோகத் தர் களுக்கு உத்தியோகபூ ர்வ கூடத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் | உணவக அனுமதி ப் பத்திரங் கள் | பிரத்தியேக ச் செயலாளர் அனுமதிப் பத்திரங்கள் | செயலாளர்க ளின் வாகன அனுமதிப் பத்திரங்கள் | உறுப்பி னர்களின் வாகன அனுமதி ப்பத்திரங் கள் |
|---|---|---|---|---|---|
| 1312 | 321 | 75 | 18 | 65 | 42 |

(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான அன்றாட அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் (அண்ணளவாக)

| அரச உத்தியோகத்தர் களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | அரச உத்தியோகத்தர் களுக்கான கலரி அனுமதிப் பத்திரங்கள் | அரச உத்தியோகத்தர் களுக்கு உத்தியோகபூர்வ கூடத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் | 2017 வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நாள் | 2017 வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட விவாதத்துக்கான அனுமதிப்பத்திரங்கள் |
|---|---|---|---|---|
| 52 | 152 | 520 | 770 | 1520 |

(இ) 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட விவாத நாட்களில் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிப்பத்திரங்கள் (அண்ணளவாக)

| பணியாட்டொகுதிக்கு | | பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு | அச்சிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் |
|---|---|---|---|
| 88 | | 67 | கலரி 1000<br>வாகனங்கள் 600 |

(ஈ) பணியாட்டொகுதியின் பிரத்தியேக வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் (அண்ணளவாக)

| மோட்டார் கார்கள் | துவிச்சக்கர வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் |
|---|---|
| 321 | 381 |

(உ) உறுப்பினர்களின் சாரதிகளுக்கென 46 வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

(ஊ) பத்திரிகை நிருபர்கள் மற்றும் பத்திரிகை செய்தியாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் முறையே 170 மற்றும் 08 வழங்கப்பட்டுள்ளன.

(எ) பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். (அண்ணளவாக)

| | | |
|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆணடு வழங்கப்பட்ட கலரி அனுமதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | 5100 |
| (ii) | பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கு (குழுவொன்றுக்கு தலா ஒன்று வீதம்) வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் (Group Passes) | 2900 |
| (iii) | வழங்கப்பட்ட தற்காலிக மாதாந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 2276 |
| (iv) | வழங்கப்பட்ட தற்காலிக மாதாந்த அனுமதிப்பத்திரங்களின் மாதாந்த சராசரி | 190 |
| (v) | முன் அனுமதியின்றி பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கு வருகைத் தந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர ஆட்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3398 |

**(iv) பாராளுமன்றத்தை சூழவுள்ள பிரதேசத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக பாதுகாப்பு விடுவிப்பு சான்றிதழ் வழங்கல்**

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பாராளுமன்ற பாதுகாப்பு விடுவிப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி வழங்கியவற்றின் எண்ணிக்கை, அதற்கு ஏற்புடையதாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் அது சார்ந்த விபரங்கள் விபரங்கள் பின்வருமாறாகும்.

| **கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **ந.அ. அதிகாரசபை மற்றும் ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 157 | 135 | 04 |

## 8. நிருவாகத் திணைக்களம்

### 8.1 தாபன அலுவலகம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியை வினைத்திறன் மிக்கதும் பயன்மிக்கதுமான நிலைக்கு கொண்டு செல்லும் பொருட்டு மனித வளத்தை பெருமிதம் கொள்ளும் வகையில் முகாமைத்துவம் செய்வதே தாபன அலுவலகத்தின் முதன்மையான பொறுப்பாகும். அதன் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்தல், பதவி உயர்வுகள் அளித்தல் போன்ற நிறுவனம் சார்ந்த

பணிகளுடன் பணியாட்டொகுதியின் அறிவு, ஆற்றல் மற்றும் இயலளவை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளுக்கு பணியாட்டொகுதி அங்கத்தவர்களை ஆற்றுப்படுத்தும் பணியையும் செய்தது.

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**(i) உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/பாடநெறிகள்/விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பின்வரும் நிறுவனங்கள் மூலம் (வெளிவாரி) மற்றும் பாராளுமன்றத்துக்குள்ளும் அண்ணளவாக பணியாட்டொகுதியை சேர்ந்த 350 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/பாடநெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| | |
|---|---|
| வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம் | 70 |
| பிராக் நிறுவனம் | 02 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | 04 |
| இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் | 111 |
| British Council | 20 |
| தரணய ஒன்றியம் | 100 |

| | |
|---|---|
| அரச கரும மொழிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | |
| சிங்கள மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| தமிழ் மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| அரச அச்சுத் திணைக்களம் | |
| கணினி சித்திர வடிவமைப்பு பற்றிய டிப்ளோமா | 10 |
| விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் | 24 |

**(ii) வெளிநாட்டு பயிற்சிகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் /கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்/மாநாடு**

| | |
|---|---|
| Advanced certificate course in English Language and IT proficiency (India) | 01 |
| Seminar on Economic Cooperation for Southern Asian Countries (China) | 01 |
| Certificate course in cloud infrastructure management (ITEC) (India) | 01 |
| Study Programme – Legislative Assembly of Karnataka (India) | 10 |
| Leadership Engagement and Development – I (ITEC) (India) | 01 |
| Internship Programme for Foreign Parliamentary officials (India) | 08 |
| Seminar on Economic Development and Financial Management for Sri Lanka (China) | 01 |
| Legislative Drafting (India) | 01 |
| Management Training on Natural Disaster Prevention and Relief (China) | 01 |
| Seminar on population, sustainable Development and Poverty Reduction for Developing Countries (China) | 01 |

**<u>தாபன பணிகள்</u>**

**ஆட்சேர்ப்பு –**

பாராளுமன்ற பணியாட்டொகுதிக்கு 58 புதிய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அப்பதவிகள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்கள் | 03 |
| தொழிநுட்ப உத்தியோகத்தர் | 04 |
| குழு அறிக்கையாளர் | 01 |
| சமையற்காரர் | 08 |
| முறைமை வடிவமைப்பாளர் | 01 |
| பாராளுமன்ற உத்தியோகத்தர் | 18 |
| சுருக்கெழுத்தாளர்கள் | 03 |
| சாரதி | 01 |
| தளபாட மெருகேற்று பணியாளர் | 01 |
| உதவி வீடு பராமரிப்பாளர் | 13 |
| உதவி பண்டம் ஏற்கும் உத்தியோகத்தர் | 05 |

## 8.2 உறுப்பினர் சேவை அலுவலகம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது பதவியின் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகளை உரிய விதத்தில் உரிய நேரத்தில் அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், பாராளுமன்றத்தின் உரிய பிரிவுகள் ஊடாக அவை உரிய விதத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்தலும் இப்பிரிவின் முக்கியமான பணியாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்களது உத்தியோகபூர்வ வீட்டுத்தொகுதி மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள "சேனாதிபதி இல்லம்" விடுமுறை இல்லத்தின் நிருவாக நடவடிக்கைகள் உறுப்பினர் சேவை அலுவலகத்தின் விடயப்பரப்புக்குள் உள்ளடங்குகின்றன.

## 8.3 போக்குவரத்து அலுவலகம்

பாராளுமன்ற பணியாட்டொகுதி மற்றும் இணைந்த பணியாட்டொகுதியினரின் பிரயாண வசதிகளைச் செய்துகொடுத்தல், வாகனப் பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 9. ஹன்சாட் திணைக்களம்

2017 ஆம் ஆண்டில் ஹன்சாட் திணைக்களம் நிறைவேற்றிய கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு.

(i) 95 பாராளுமன்ற அமர்வு நாட்கள் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.

(ii) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE), அரசாங்கக் கணக்குக் குழு (PAC), உயர் பதவிகள் பற்றிய குழு, சிறப்புரிமைகள் பற்றிய குழு, பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், சிறுவர் ஒன்றியம், நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு, ஆலோசனைக் குழுக்கள் (விசேட), நிலையியல் குழுக்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு பற்றிய குழுக்கள் உள்ளிட்ட 187 குழுக்கூட்டங்கள் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.

(iii) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களை அறிக்கையிடலுக்கு உட்படுத்தல்.

(iv) திருத்தப்படாத 122 ஹன்சாட் அறிக்கைகளை அச்சுப் பிரதிப்படி சரிபார்த்தல் (தொகுதி 245-255)

(v) திருத்தப்பட்ட 85 ஹன்சாட் அறிக்கைகளை இறுதி அச்சிடலுக்காக அனுப்புதல். (தொகுதி 241-247)

(vi) 05 ஹன்சாட் பிரிவுத்தொகுதிகள் புத்தகங்களாகக் கட்டுவதற்கு அச்சகத்துக்கு அனுப்பப்பட்டன.

(vii) காலமான 12 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களது அனுதாபப் பிரேரணைகள் உள்ளடங்கிய ஹன்சாட் அறிக்கைகள் அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டன.

(viii) 104 குழு அறிக்கைகளை பதிப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ix) 95 ஹன்சாட் அறிக்கைகளுடன் தொடர்புடைய 08 சூசிகைகளை தயாரித்தல் மற்றும் அச்சிடுவதற்கு அனுப்புதல். (தொகுதி 239-244)

(x) அன்றாடம் பாராளுமன்றத்தினுள் இடம்பெறும் நடவடிக்கைகள் பற்றிய சூசியினையும் அக்கருமங்களுக்காக எடுக்கும் காலம் பற்றிய அறிக்கையினையும் முன்னெடுத்துச் செல்வதுடன், எதிர்கால பயன்பாட்டுக்காக வகைப்படுத்தப்பட்ட விடயங்களைக் கொண்டமைந்த ஆவணத்தை முன்னெடுத்தல்.

## 10. இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

இணைப்புப் பொறியியலாளர் திணைக்களத்தினால் 2017ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் பல விசேட கருத்திட்டங்கள் பாராளுமன்ற செயலகம் மற்றும் அதன் வளாகத்திலும் மாதிவெல உறுப்பினர் வீடமைப்புத் தொகுதியிலும் மேற்கொள்ளுதல்.

| இல. | விபரம் | செலவு (ரூபா) |
|---|---|---|
| 1. | பாராளுமன்ற சபை பீடத்தில் ஒலிபரப்பு தரப்படுத்தல் கட்டமைப்பொன்று வழங்கப்படல், நிறுவப்படல், பரிசோதித்தல் மற்றும் இயக்கி காண்பித்தல். (Procurement of Broadcast Quality CCTV System in the main chamber) | 237,988,627.59 |
| 2. | சபா மண்டபத்தில் உறுப்பினர்களின் மேசை விளக்குகளை திருத்துதல் (Repair to the Table Stand lamps at chamber) | 730,800.00 |
| 3. | ஜயந்திபுர நுழைவாயில் பாதுகாப்பு கூடத்தை பிரித்தல் மற்றும் தயார் செய்தல் (Fabrication of a Partition for Secretary Officer's Counter at Jayanthipura Entrance) | 70,055.00 |
| 4. | பாராளுமன்ற பின்புற நுழைவாயிலுக்கு கேட் வழங்குதல் மற்றும் பொருத்துதல் (Fabricating Supplying & Erecting of a Gate at Rear Entrance of Parliament) | 682,710.00 |
| 5. | பாராளுமன்றத்தில் Digital Signage தொகுதியை பொருத்துதல். (Supply Installation Execution & Commissioning of Digital Signage System to Parliament) | 1,669,640.31 |
| 6. | மாதிவெல உறுப்பினர் வீடமைப்பு தொகுதிக்கு கழிவு பம்பியை வழங்குதலும் பொருத்துதலும் (Supply & Installation of Sewerage Pump for MP's Housing Scheme, Madiwela) | 2,445,751.00 |
| 7. | சபை முதல்வர் அலுவலகம், அரசாங்க கட்சியின் முதல் கோளாசான் அலுவலகம் மற்றும் முதலாம் மாடியிலுள்ள ஏனைய சகல அலுவலகங்களுக்கும் இரரண்டாம்நிலை குளிரூட்டி தொகுதியொன்றை பொருத்துதல். (Supply, Installation, Testing and Commissioning of Air handling unit & Secondly Chilled water pump) | 4,518,317.00 |
| 8. | Sever Room இல் VRF குளிரூட்டி தொகுதியொன்றை பொருத்துதல். (Supply Installation, Testing & Commissioning of VRF A/C unit in Server Room) | 1,784,361.87 |
| 9. | குளிரூட்டி களஞ்சிய அறைக்கு குளிரூட்டப்பட்ட சுற்றமைப்பொன்றை வழங்குதலும் பொருத்துதலும் (Cold Room freezer Refrigeration cycle) | 858,859.88 |
| 10. | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் அறைகளுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படல் (Supply of Furniture for Minister Rooms) | 2,587,090.00 |
| 11. | உறுப்பினர்களின் பிரத்தியேக உணவு அறையில் விசேட அதிதிகளுக்கு ஒரு பகுதியை ஒதுக்குதல் (Partitioning of Member's Private Dining) | 2,171,856.00 |
| | மொத்த செலவு | 255,508,068.65 |

## 11. தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம்

2017 ஆண்டில் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் தகவல் முறைமை மற்றும் தொடர்பாடல் உட்கட்டமைப்பு பராமரிப்பு, நிறுவனத்தின் பல பணியகங்களில் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு நிதி முகாமைத்துவ, அரச பொறுப்பு முயற்சிகள் மற்றும் அரசாங்க கணக்கு குழுவிற்கான தகவல் முகாமைத்துவம், உணவு அறை முகாமைத்துவம், சிக்கனக் கடன் சங்கத்தின் முகாமைத்துவம், விருந்தினர்களின் வரவு தகவல் முகாமைத்துவத்திற்காக கட்டமைப்புக்களை உருவாக்குதல், உள்ளக இயக்கிகளை மேற்படுத்தல் மற்றும் பராமரித்தல், பராமரிப்பு சேவைகள் ஒப்பந்தங்கள் பற்றிய நடவடிக்கை, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பாராளுமன்ற இணைய தளத்தை பராமரித்தல், தகவல் இடர் முகாமைத்துவ கட்டமைப்பை மேற்பார்வை செய்தல் முதலிய செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்றது.

## 12. உள்ளக கணக்காய்வு பணியகம்

2017 ஆண்டில் பின்வரும் துறைகளில் காணப்படும் செயற்பாடுகள் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

PF/PE/7 இலக்க மற்றும் 2000.03.15 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் படி மனித வளங்கள் உள்ளிட்ட அரச வளங்களை செயற்றிறனுடன் உபயோகிக்கும் நோக்குடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டது.

கீழ்வருமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நான்கு கூட்டங்களை இவ்வாண்டில் நடத்தியுள்ளது.

| கூட்டங்கள் | கூட்டங்கள் நடத்தப்பட்ட திகதி | திறைசேரிக்கு நிகழ்ச்சி குறிப்புக்கள் அனுப்பபட்டதா? | கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதா? | மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றி பின்னாய்வு மேற்கொள்ளப்பட்டதா? |
|---|---|---|---|---|
| 1 வது காலாண்டு | 29.03.2017 | ஆம் | ஆம் | ஆம் |
| 2 வது காலாண்டு | 30.06.2017 | ஆம் | ஆம் | ஆம் |
| 3 வது காலாண்டு | 25.10.2017 | ஆம் | ஆம் | ஆம் |
| 4 வது காலாண்டு | 14.12.2017 | ஆம் | ஆம் | நடைமுறையில் உள்ளது. |

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் எடுக்கப்பட்ட கீழ்வரும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்

- பாராளுமன்றத்தின் சகல அலுவலகங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற தலைப்புடன் கூடிய கடித தலைப்புகளுக்கு ஒரே மாதிரியை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- பாராளுமன்றத்தினால் பயன்படுத்தப்படும் காணிகளை சட்டரீதியாக சுவீகரிப்பதற்கும் இதற்கான காணி உறுதிகளை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள்களுக்கு ஏற்ப பாராளுமன்றத்தினால் பயன்படுத்தப்படும் காணிகளை சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக மாநகரசபைகள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பததிரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வங்கியுள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளர் செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேனாதிபதி இல்லம் அமைந்துள்ள காணிக்குரிய கையளிப்பு பத்திரம் மற்றும் தற்போது ஹோமாகம காணி பதிவு அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ள, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஜயவடனகம பாராளுமன்ற பணியாட்டொகுதி இல்லங்கள் 15 இற்குமான உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கு உள்ளக கணக்காய்வு பணியகத்தினால் தலையீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம்:

2017 ஆண்டில் வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகத்தினால் முக்கியமாக பொதுநலவாய நாடுகள் பாராளுமன்ற சங்கம், சர்வதேச பாராளுமன்ற சங்கம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகிய சங்கங்களுக்குரிய சகல செயற்பாடுகளும் சேவைகளும் ஆற்றப்பட்டுள்ளன.

இதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநாடுகள், செயலமர்வுகள், சுற்றுலாக்கள், கூட்டங்கள், கற்கைச் சுற்றுலாக்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டன.

- பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் மாநாடு – ஐக்கிய இராச்சியம், 2017 பெப்ருவரி 24 முதல் 27 வரை
- பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைமுறை தொடர்பிலான பொதுநலவாய நாடுகளின் செயலமர்வு, தென் ஆபிரிக்கா, 2017 மே மாதம் 21 முதல் 28 வரை
- தேசிய பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தினம் தொடர்பான சர்வதேச பாராளுமன்ற கருத்தரங்கு, ஐக்கிய இராச்சியம், 2017 மார்ச் 27 முதல் 31 வரை
- நவீன அடிமைத்துவம் தொட்பிலான ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு, ஐக்கிய இராச்சியம் 2017 ஏப்ரல் 25 முதல் 28 வரை
- தேசிய நெருக்கடிக்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலான அரசாங்க கணக்குகள் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட கற்கைக் குழுவின் செயலமர்வு, கனடா, 2017 யூலை 12 முதல் 15 வரை
- 14 ஆவது கனேடிய பாராளுமன்ற மாநாடு, 2017 ஒக்டோபர் 15 முதல் 21 வரை
- 63 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற கருத்தரங்கு, டக்கா, பங்களாதேஷ் 2017 நவம்பர் 04 முதல் 08 வரை
- தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்கள் தொடர்பிலான பூகோள மாநாடு, இந்தியா, 2017 சனவரி 29 முதல் 31 வரை
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் எதிர்பார்ப்புத் தொடர்பிலான தெற்காசிய சபாநாயகர்களின் கூட்டத்தொடர், இந்தோர், இந்தியா, 2017 பெப்ருவரி 17 முதல் 21 வரை


- ஈரான் பாராளுமன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பலஸ்தீன மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலான 6 ஆவது சர்வதேச கருத்தரங்கு, ஈரான், 2017 பெப்ருவரி 20 முதல் 24 வரை
- இலங்கைப் பாராளுமன்ற தூதுக் குழுவின் ஈரான் உத்தியோகபூர்வ விஜயம், ஈரான், 2017 மார்ச் 03 முதல் 06 வரை
- ஆசிய பாராளுமன்ற சங்கத்தின் அரசியல் அலுவல்கள் மற்றும் ஆசிய பாராளுமன்றமொன்றைத் தாபிப்பதற்கான விசேட நிலையியற்குழுவின் கூட்டம், இஸ்லாமாபாத், பாகிஸ்தான், 2017 மார்ச் 13 முதல் 17 வரை
- 136 ஆது பாராளுமன்றங்களுக்கு இடையிலான கூட்டத்தொடர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கூட்டங்கள், டக்கா, பங்களாதேஷ், 2017 மார்ச் 30 முதல் ஏப்ரல் 06 வரை
- ஆசிய பசுபிக் பிராந்திய இளம் பாராளுமன்ற பிரதிநிதிகளின் மாநாடு, இலங்கை, 2017 ஏப்ரல் 24 முதல் 28 வரை
- பாராளுமன்றங்களுக்கு இடையிலான சங்கத்தின் திட்டம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள் மாநாடு, சுவிட்சர்லாந்து, 2017 மே 15 முதல் 21 வரை
- சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான பாராளுமன்ற பிரதிநிதிகளின் மாநாடு, சிங்கப்பூர், 2017 மே 15 முதல் 17 வரை
- இலங்கைப் பாராளுமன்ற தூதுக் குழுவின் சீன உத்தியோகபூர்வ விஜயம், சீனா, 2017 யூன் 13 முதல் 19 வரை
- பாராளுமன்றக் குழுக்களின் பணிகள் மற்றும் வினைத்திறன் பற்றிய கற்கை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டம், ஜெர்மனி, 2017 யூன் 25 முதல் யூலை 01 வரை
- 137 ஆது பாராளுமன்றங்களுக்கு இடையிலான மாநாடு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கூட்டங்கள், ரஷ்யா, 2017 அக்டோபர் 13 முதல் 20 வரை
- நிலைபேறான அபிவிருத்தி பற்றிய உலக பாராளுமன்றக் கூட்டத்தொடர், பாலி, இந்துனேசியா, 2017 செப்தெம்பர் 06 முதல் 07 வரை
- மண்சரிவுகளைக் குறைத்துக்கொள்வது தொடர்பிலான மாநாடு, குன்மின், சீனா, 2017 ஆகஸ்ட் 13 முதல் 21 வரை
- ஓமான் அரசுப் பேரவையின் தவிசாளரின் தலைமையில் ஓமான் தூதுக் குழுவின் உத்தியோகபூர்வ விஜயம், இலங்கை, 2017 டிசம்பர் 4 முதல் 8 வரை
- தெற்காசிய பாராளுமன்ற பிரதிநிதிகளின் சிறுவர்கள் தொடர்பிலான கூட்டத்தொடர், கத்மன்டு, நேபாளம், 2017 மார்ச் 02 முதல் 03 வரை
- சமூக நியாயத்தன்மை மற்றும் சனநாயகத்தை வலுவூட்டுவதற்கான பாராளுமன்ற பெண் பிரதிநிதிகளின் செயற்பணி தொடர்பிலான கருத்தரங்கு, இஸ்லாமாபாத், பாகிஸ்தான், 2017 மார்ச் 11 முதல் 16 வரை
- 8 ஆவது சார்க் நாடுகளின் சபாநாயகர்களின் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தரங்கு, இலங்கை 2017 ஒக்டோபர் 03 முதல் 07 வரை.

பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள் (தற்போது 54 சங்கங்கள் காணப்படுகின்றன.)

பொதுநலவாய நாடுகளின் சங்கம், பாராளுமன்றங்களுக்கு இடையிலான சங்கம் மற்றும் சார்க் பாராளுமன்ற சங்கத்தினால் பாராளுமன்ற அலுலவர்களுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட பல்வேறு கற்கை விஜயங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்.

சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளரைச் சந்திக்க வருகைதந்த பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளின் குழுக்கள் தொடர்பிலான ஒருங்கிணைப்பு மற்றும் ஊடக நடவடிக்கைகள்.

அமைச்சர்கள், உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பிலான வீசா, கடவுச்சீட்டு மற்றும் விமான நிலைய விசேட அதிதிகளின் பகுதியை ஒதுக்கும் நடவடிக்கைகள் மற்றும் விமான நிலையக் கடமைகள்.


ORGANIZATION CHART OF PARLIAMENT OF SRI LANKA
SECRETARY GENERAL OF PARLIAMENT
CHIEF OF THE STAFF AND DEPUTY SECRETARY GENERAL OF PARLIAMENT
N
L
K
J
IA
I
H
G
F
E
D
C
B
A
ASSISTANT SECRETARY GENERAL OF PARLIAMENT (ADMINISTRATION SERVICES)
ASSISTANT SECRETARY GENERAL OF PARLIAMENT (LEGISLATIVE SERVICES)
SERJEANT-AT-ARMS
DIRECTOR ADMINISTRATION
DIRECTOR FINANCE
CO-ORDINATING ENGINEER
DIRECTOR (C & HKS)
DIRECTOR INFORMATION SYSTEMS & MANAGEMENT
DIRECTOR LEGISLATIVE SERVICES
EDITOR OF HANSARD
DEPUTY SERJEANT-AT-ARMS
DEPUTY DIRECTOR ADMINISTRATION
DEPUTY CO-ORDINATING ENGINEER
SYSTEMS ENGINEER
PARLIAMENTARY INTERPRETERCHIEF
LIBRARIAN
DEPUTY EDITOR OF HANSARD
CHIEF INTERNAL AUDITOR
ASSISTANT SERJEANT-AT-ARMS
ASST. DIRECTOR (ADMIN) - (ESTATE) / (MEMBERS SERVICES) / (TRANSPORT)
ASST DIRECTOR (ADMIN) (CATERING ACCOUNTS)
ASSIST DIRECTOR (ADMIN) - (FINANCE & ACCT) / (SUPPLIES & SERVICES)
EXECUTIVE HOUSEKEEPER
EXECUTIVE CHEF / F & B MANAGER
SYSTEMS ANALYST / COMMUNICATION & SECURITY ENGINEER
DEPUTY CHIEF PARLIAMENTARY INTERPRETER
ASST. DIRECTOR (ADMIN) - (TABLE, BILLS, P.PETITION, COMM I, COMM II, PAC & COPE)
ASSISTANT EDITOR OF HANSARD
PRINCIPAL OFFICER
ASSISTANT HOUSEKEEPER
SOUS CHEF/ DEPUTY F & B MANAGER
WEB NETWORK ADMINISTRATOR / SYS. DESIGNER / DATA BASE ADMINISTRATOR / SYS. ADMINISTRATOR
DEPUTY LIBRARIAN / CHIEF RESEARCH OFFICER
DEPUTY PRINCIPAL OFFICER
CHIEF INSPECTOR (CIVIL / ELECT.)
RESTAURANT MANAGER
PARLIAMENTARY INTERPRETER
ASSISTANT LIBRARIAN / RESEARCH OFFICER
HANSARD REPORTER
TRANSPORT OFFICER
BUNGALOW MANAGER
COMPUTER PROGRAMMER / WEB EDITOR
COMMITTEE REPORTER
ASSISTANT PRINCIPAL OFFICER
INSPECTOR (CIVIL / ELECT.)
HOUSEKEEPING SUPERVISOR / GARDEN SUPERVISOR
KITCHEN STEWARDING SUPERVISOR / CHEF DE PARTIE / F&B SUPERVISOR
ASSISTANT RESEARCH OFFICER
INDEXING OFFICER
CHIEF PARLIAMENTARY PROTOCOL OFFICER
PARLIAMENTARY OFFICER
TECHNICAL OFFICER
LEADING COOK
ASST. COMPUTER PROGRAMMER / HELP DESK COORDINATOR
CASHIER CLERK
HANDYMAN
COOK
LIBRARY ASSISTANT
LIBRARY ATTENDANT